DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 8ம் நாள் சாட்சியாகிய ஞானவேலு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானவேலு | வயது | 53 |
| த/பெ. | சுப்பிரமணியன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**STC.658/2022**

**( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி எதிரி தரப்பில் 08.04.2025 பு.சா.1</u>**

1. எந்த தேதி என்னை வீட்டில் இருந்து துரத்தினார்கள் என்றால் 29.08.2021. எனது மனைவிக்கு குடும்ப அட்டை எந்த விலாசத்தில் உள்ளது என்றால் என்னுடைய விசாலத்தில் உள்ளது. அது தற்போது வாங்கியுள்ளார்கள். **(எதிரியின் குடும்ப அட்டை நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிது).** 2021ம் வருடத்திற்கு பிறகு எதிரி மேற்படி விலாசத்தில் வசிக்கவில்லையா என்றால் வசிக்கவில்லை. எதிரியின் ஆதார் அட்டை எந்த தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் 02.02.2017ம் தேதி வழங்கப்பட்டுள்ளது. **(எதிரியின் ஆதார் அட்டை நகல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. எனது மகன் குருநாதனுக்கு எந்த தேதியில் ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் 19.01.2016. **(குருநாதனின் ஆதார் அட்டை நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது மகன் ஸ்ரீநாத்துக்கு எந்த தேதியில் ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் 11.01.2016. **(ஸ்ரீநாத்தின் ஆதார் அட்டை நகல் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. எனக்கு திருமணமான தேதியிலிருந்து நானும், எதிரியும் திருவள்ளுவர் தெருவில் உள்ள வீட்டில்தான் வசித்தோம் என்றால் 2010ம் வருடம் வரை தான் வசித்தோம். அதன்பிறகு எதிரி சண்டைபோட்டுக்கொண்டு சென்றுவிட்டார். எனது மனைவி திருவள்ளுவர் தெரு விலாசத்தில் வசித்து வந்ததால்தான் அவருக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறாக பெற்றுள்ளார். எனது

மகன்களும் அந்த விலாசத்தில் வசித்து வருவதால்தான் அவர்களுக்கு அந்த விலாசத்தில் ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறாக பெற்றுள்ளார்கள்.

4. எனக்கு எதிரி மற்றும் எனது மகன்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை பெற்ற விவரம் எப்போது தெரியும் என்றால் எனக்கு தெரியாது . சமீபத்தில்தான் தெரியவந்தது. எவ்வளவு நாட்களுக்கு முன்பு தெரியவந்தது என்றால் 2024 டிசம்பர் மாதம். நான் மேற்படி குடும்ப அட்டை, ஆதார் அட்டை தவறாக பெற்றுள்ளதாக வருவாய்துறையினருக்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. நான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. எதிரி, எனது மகன்கள் திருவள்ளுவர் தெருவில் உள்ள வீட்டில்தான் தொடர்ச்சியாக வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. நான் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதன்மை சாட்சியத்தில் எதிரியை வீட்டைவிட்டு வெளியேற்ற மனு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்குதான் தாக்கல் செய்துள்ளேன். வேறு வழக்கு எதுவும் தாக்கல் **(ஸ்ரீநாத்தின் ஆதார் அட்டை நகல் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்ககூடியதில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.